**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம்– 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.**

**பொருள் எண்– 01**

இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இயங்கும் TN76AC 1093 ஈப்பு வாகனம் 2005ல் வாங்கப்பட்டு மூன்று வருடம் முடிவுற்று 90550 கீ.மீ ஒடிய நிலையில் புதிதாக ஆயில்கள் மாற்றம் செய்து முழு பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. ஆகவே அவசர அவசியம் கருதி Kodai cars (P) LTD, திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் மூலம் பரிசோதனை செய்து ஆயில்கள் புதிதாக மாற்றம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.34708/–யை வழஙக இந்நகராட்சி தனி அலுவலர் 28.02.2018 அன்று முன் அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் Kodai cars (P) LTD, திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழஙக நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அஙகீகாரத்திற்கு சமா்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 252 /2018/இ1)

**தீர்மானம் எண். 79**

அனுமதித்து அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 02**

சென்னை, உயர்நீதி மன்ற மதுரைக்கிளை அரசு வழக்கறிஞர் திரு.M.ராஜராஜன் அவர்களின் கடிதத்தில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பில் வழக்காடுவதற்கு உரிய அனுமதி வழஙகுமாறு கோரியுள்ளார். அதனடிப்படையில் இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாக சென்னை, உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் தொடரப்படும் அனைத்து வழக்குகளுக்கும் உரிய வாக்கலாத்து தாக்கல் செய்து வழக்கினை திரு.M. ராஜராஜன் சென்னை, உயர்நீதி மன்ற மதுரைக்கிளை அரசு வழக்கறிஞரை நியமனம் செய்து அவர்கள் மூலம் நடத்த அஙகீகாரம் வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 1053/2018/இ1)

**தீர்மானம் எண். 80**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 03**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ8/2704/2017 நாள்.26.02.2018ம் தேதிய ஆணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஏ.எம்.முகமது அபுபக்கர் அவர்கள் பரிந்துரை செய்த கீழ்காணும் விபரப்படி வ.எண்.1 முதல் 3 வரை உள்ள பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்க்கொள்ள அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி –18 வது வார்டு நடு அய்யாபுரம் தெரு பள்ளிவாசல் முன்பு போர் மற்றும் மின் மோட்டார் அமைத்தல் பணிக்கு. | 1.00/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – கல்வத் நாயகம் தெரு கீழ் வட்டாரத்தில் போர் மற்றும் மின் மோட்டார் அமைத்தல் பணிக்கு | 1.00/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி – அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பேவர் பிளாக் அமைத்தல் பணிக்கு | 3.00/– |

மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் 02.03.2018 அன்று முன் அனுமதி வழஙகியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3327 /2018/இ1)**

**தீர்மானம் எண். 81**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 04**

உதவி ஆணையர், மத்திய (GST & contral Excise) உதவி ஆணையர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களால் 'வஙகி மேலாளர்' ஸ்டேட் பாஙக் ஆப் இந்தியா கடையநல்லூர் கிளைக்கு 05.01.2018ம் தேதிய அறிவிப்பு கடிதத்தில், இந்நகராட்சியில் குத்தகைதாரரிடம் வசூல் செய்யாத சேவை வரித் தொகையினை மத்திய அரசுக்கு செலுத்தாததால் இந்நகராட்சியின் ஸ்டேட் பாஙக் ஆப் இந்தியா, கடையநல்லூர் வஙகிக் கணக்கு எண்.67228645682– லிருந்து தொகை ரூ.634241+ Applicable Interest –யினை பிடித்தம் செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்து. மேற்கண்ட தொகை 2007–08 முதல் 2011–12 வரை உள்ள குத்தகை இனஙகளில் குத்தகைதாரர்களிடம் வசூல் செய்யப்படாத தொகையினை செலுத்த இயலாத நிலையில் இத்தொகையினை மேற்படி வஙகிக் கணக்கில் பிடித்தம் செய்யாமல் இருக்கவும் சென்னை, உயர்நீதி மன்றம் மதுரைகிளை வழக்கறிஞர் திரு.பாசியம் அவர்கள் மூலம் WP(MD)No.1370/2018 மற்றும் WMP(MD)No.1454/2018–ன் நீதிப் பேராணை நாள்.24.01.2018ன்படி இடைக்கால தடையாணை பெறப்பட்டுள்ளது. மேற்படி இடைக்கால தடையாணை பெறப்பட்டதற்கு வழக்கறிஞர் திரு.பாசியம் அவர்களுக்கு வழக்குக் கட்டணம் தொகை ரு.10000/– வழஙக அஙகீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் தனி அலுவலர் அவர்கள் 16.03.2018ம் தேதியன்று முன் அனுமதி வழஙகியுள்ளதின் பேரில் வழக்கறிஞர் அவர்களுக்கு தொகை வழஙக நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அஙகீகாரத்திற்காக.

**(ந.க.எண். 5662 /2010/அ3)**

**தீர்மானம் எண். 82**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 05**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.25/செமதொ/செ/2018. நாள்.23.01.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும் "எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நிறைவு விழா மலர்" வெளியிட உள்ளதால் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் பொருட்டு, இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை தினமணி எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் தினமணி சிறப்பு மலரில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி தினமணி சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய 16.03.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1104/2018/இ1)**

**தீர்மானம் எண். 83**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 06**

மாவட்ட ஆட்சியர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.25/செமதொ/செ/2018. நாள்.23.01.2018ம் தேதிய கடிதத்தில் "எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நிறைவு விழா மலர்'' வெளியிட உள்ளதால் தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் பொருட்டு, இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை மாலைமலர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் மாலைமலர் சிறப்பு மலரில் இந்நகராட்சிப் பகுதியில் 2017–2018ம் ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்த விளம்பரத்தினை விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடியும், அரசு திட்ட விளம்பரமாக இருப்பதாலும், அவசரஅவசியம் கருதி மாலைமலர் சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய 15.03.2018 அன்று தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் சிறப்பு மலரில் விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவுத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1054/2018/இ1)**

**தீர்மானம் எண். 84**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 07**

இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண்.17 முதல் 33 வரையுள்ள மொத்தம் 17 வார்டுகளில் 204 நபர்களை கொண்டு தனியார் துப்புரவு பணிகள் ரூ.310/- இலட்சம் (மூன்று கோடியே பத்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் 19.02.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், 07.03.2018 அன்று தகுதிப்பெற்ற நிறுவனத்திடம் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளி ஊதிய விகிதம் (நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ஊதியம் | ( ESI, EPF, சீருடைப்படி, பாதுகாப்பு உபகரணங்கள், மற்றும் நிர்வாக செலவினங்கள் உட்பட) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | AVM Service Point, Rajapalayam. | 317.99/- | 88/- | 405.99/- |
| 2. | Exsernet, Madurai. | 319/- | 89/- | 408/- |

வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஊதிய விகிதம் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ( ESI, EPF, சீருடைப்படி மற்றும் நிர்வாக செலவினங்கள் உட்பட) ரூ.405.99/- கொடுத்துள்ள வரிசை எண்.1-ல் கண்ட AVM Serivce Point, Rajapalayam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு தனியார் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.6035/2017/எச்1)**

**தீர்மானம் எண். 85**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 08**

இந்நகராட்சிப் பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2017-2018 ஆம் ஆண்டிற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கீழ்கண்ட விபரப்படி வாங்கி வழங்கவும், அதற்கான

உத்தேச செலவுத்தொகை ரூ.3,00,000/-(மூன்று இலட்சம் மட்டும்)ஐ பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

| வ.எண் | பாதுகாப்பு உபகரணங்கள் | எண்ணம் |
|---|---|---|
| 1 | முக கவசம் | 120 |
| 2 | தலைகவசம் | 50 |
| 3 | கையுறை | 200 |
| 4 | காலுறை | 59 |
| 5 | ஒளிரும் மேல் சட்டை | 78 |

(ந.க.எண்.750/2018/எச்1)

**தீர்மானம் எண். 86**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 09**

கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் மூலம் நடைபெறவுள்ள நோய் தடுப்பு பயிற்சியில் திரு.பா.சக்திவேல், துப்புரவு ஆய்வாளர் 26/03/2018 முதல் 28/03/2018 வரை மூன்று நாட்கள் கலந்து கொள்வதற்கு ரூ.2550/– செலுத்துமாறு இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் ந.க.எண்.158/16/சி–2 நாள்.02/03/2018 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்அரசின் பயிற்சியாக இருப்பதால் அவசரம் அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் 23/03/2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் நிறுவனத்திற்கு பயிற்சிக்கான தொகை ரூ.2550/– வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கு அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1172/2018/சி1)

**தீர்மானம் எண். 87**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 10**

இந்நகராட்சி பராமரிப்பின் கீழ் இயங்கி வரும் இடைநிலை நீரூந்து நிலைய வளாகத்திலுள்ள 6.75 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர் தேக்க தொட்டி டெலிவரி வால்வு (450mm) ஷட்டர் தேய்மானமாகி வால்வு அடைத்து வைத்திருக்கும் போதும் மிக அதிமாக தண்ணீர் கசிவு ஏற்ப்பட்டு குடிநீர் விநியோக பகுதிக்கு சென்று வருகின்றது. அதன் காரணமாக குடிநீரை முழுமையாக தேக்கி வைத்து எந்த பகுதிக்கும் விநியோகம் செய்ய முடியவில்லை. எனவே மேற்காணும் குடிநீர் பகிர்மான குழாயில் (450mm) புதிய வால்வு ஒன்று பொருத்தி குடிநீர் விநியோகம் செய்வதற்கும், மேற்காணும் வளாகத்திலுள்ள (4.00 இலட்சம் லிட்டர்) மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி டெலிவரி வால்வு (ரகுமானியாபுரம் 1 வது தெரு முதல் 9 வது தெரு வரை செல்லும்) 150mm குழாயில் 150mm புதிய வால்வு ஒன்று பொருத்தப்பட வேண்டியுள்ளது. மேலும் மேற்காணும் இரண்டு இடங்களிலும் வால்வு தொட்டிகள் அமைத்து முடி போடுவதற்கும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,75,000/–க்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 519 /2018/இ1)

**தீர்மானம் எண். 88**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 11**

மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களின் 28.01.2018ம் தேதிய நேரடி ஆய்வின் போது தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கு புகைமருந்து இயந்திரங்களை அதிக அளவில் பயன்படுத்தி முதிர் கொசுக்களை விரைவாக அழித்திட வாகனத்தில் பொருத்தும் புகைப்போக்கி இயந்திரங்களை இயக்குவதற்கு இந்நகராட்சியில் இரண்டு எண்ணம் ஆட்டோக்கள் மட்டுமே உள்ளதால் பொதுசுகாதார அவசர, அவசியம் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு அத்தியாவசியம் கருதி கூடுதலாக இரண்டு ஆட்டோக்கள் தினசரி வாடகை அடிப்படையில் தனியார் மூலம் பெற்று புகைமருந்து அடிக்கும் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.25,000/-(இருபத்தைந்தாயிரம் மட்டும்)ஐ பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.230/2018/எச்1)**

**தீர்மானம் எண். 89**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 12**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உத்தரவின் பேரில் இந்நகராட்சிப் பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்கும், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்துார், சாத்துார், கோவில்பட்டி, புளியங்குடி, குழித்துறை, தென்காசி ஆகிய நகராட்சிகளிலிருந்து மொத்தமாக 80 துப்புரவு பணியாளர்கள் இந்நகராட்சிக்கு வருகை தந்து துப்புரவு பணிகள் மேற்கொள்ள இருப்பதாலும், மேற்படி பணியாளர்கள் மூலம் அகற்றப்படும் வாறுகால் மண் மற்றும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு இந்நகராட்சியில் போதிய அளவில் வாகனங்கள் இல்லாததால் பொதுசுகாதார அவசர, அவசியம் மற்றும் டெங்கு நோய்த்தடுப்பு அத்தியாவசியம் கருதி கூடுதலாக மூன்று எண்ணம் டிராக்டர்கள் தினசரி வாடகை அடிப்படையில் தனியார் மூலம் பெற்று திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.75,000/-(எழுபதைந்தாயிரம் மட்டும்)ஐ பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.396/2018/எச்1)**

**தீர்மானம் எண். 90**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 13**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் மற்றும் டிரைலர் எண். TN72 U2038 & 5204 வாகனத்திற்கு தகுதிச்சான்று 30.03.2018ம் தேதியுடன் முடிவடைவதால் அதனை மீண்டும் புதுப்பிக்கும் பொருட்டு பொதுசுகாதார அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி மேற்படி வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.55,000/-க்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1084/2018/எச்1)**

**தீர்மானம் எண். 91**

அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்– 14**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் கீழ்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 28.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2017–18 | | | | |
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு (தேசிய நெடுஞ்சாலை–208 கிழக்கு பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.95/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.73% அதிகம் |
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு (தேசிய நெடுஞ்சாலை–208 மேற்கு பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.60/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.72% அதிகம் |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.2 கோபால கிருஷ்ணசாமி கோவில் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.73% அதிகம் |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிருஷ்ணாபுரம் ரயில்வே பீடர் ரோடு தேசிய நெடுஞ்சாலை–208 முதல் சடை மாரியம்மன் கோவில் வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.72% அதிகம் |
| 5. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிருஷ்ணாபுரம் ரயில்வே பீடர் ரோடு சடை மாரியம்மன் கோவில் முதல் மங்கம்மாசாலை வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.00/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.73% அதிகம் |
| 6. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 திலகர் மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 8.25/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.72% அதிகம் |
| 7. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 திலகர் கிழக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 8.15/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.72% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிழக்கு மலம்பாட்டை மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.73% அதிகம் |
| 9. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.3 கிழக்கு மலம்பாட்டை கிழக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.00/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.73% அதிகம் |
| 10. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 7,8,9 ஜவஹர் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.P.மாடசாமி,<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.98% அதிகம் |
| 11. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 4 பூந்தோட்ட தெருவில் (மங்கம்மா சாலை குறுக்கு தெரு) பேவர்கல் அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 6.00/– | திரு.M.மாலையப்பன்<br>திரு.N.ரவிசந்திரன், | 0.01% குறைவு<br>0.01% அதிகம் |
| 12. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 4 புலவர் தெருவில் (மங்கம்மா சாலை குறுக்கு தெரு) பேவர்கல் அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 4.00/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.71% அதிகம் |
| 13 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 21, மற்றும் 25ல் உள்ள மேற்கு மலம்பாட்டை ரோடு அட்டக்குளம் சந்திப்பு முதல் மேலக்கடையநல்லூர் நகராட்சி பூங்கா வரை (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.73% அதிகம் |
| 14 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 21, மற்றும் 25ல் உள்ள மேற்கு மலம்பாட்டை ரோடு அட்டக்குளம் சந்திப்பு முதல் மேலக்கடையநல்லூர் நகராட்சி பூங்கா வரை (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.00/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.005% குறைவு<br>0.71% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 25ல் பண்பொழி ரோடு நகராட்சி பூங்கா முதல் கடகாலீஸ்வரர் கோவில் நுழைவாயில் வரை (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.95/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.S.அருணாசலம், | 0.01% குறைவு<br>0.72% அதிகம் |
| 16 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 24ல் பண்பொழி ரோடு நகராட்சி பூங்கா முதல் கடகாலீஸ்வரர் கோவில் நுழைவாயில் வரை (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.95/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.01% குறைவு<br>0.84% அதிகம் |
| 17 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 24ல் பண்பொழி ரோடு நகராட்சி பூங்கா முதல் கடகாலீஸ்வரர் கோவில் நுழைவாயில் வரை (மூன்றாம்பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.95/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி, | 0.01% குறைவு<br>0.84% அதிகம் |
| 18 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.22, பண்பொழி ரோடு முதல் கண்ணார் தெரு வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.95/– | திரு.P.மாடசாமி,<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.98% அதிகம் |
| 19 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.22, கண்ணார் தெற்கு தெரு (மங்கம்மா சாலை முதல் கடகாலீஸ்வரர் கோவில் சன்னதி தெரு வரை) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.25/– | திரு.P.மாடசாமி,<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.97% அதிகம் |
| 20 | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22 மாரியம்மன் கோவில் சன்னதி தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.80/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.01% குறைவு<br>0.84% அதிகம் |
| 21 | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, மங்கம்மா சாலையில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.96/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.01% குறைவு<br>0.85% அதிகம் |
| 22 | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, இந்திரா நகர் புதுக்காலனி மங்கம்மாள் சாலை முதல் அரசு மாணவர் விடுதி வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.75/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.005% குறைவு<br>0.83% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, இந்திரா நகர் புதுக்காலணி (அரசு மாணவர் விடுதி முதல் கிழமேல் சாலை) வரை தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 8.25/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.01% குறைவு<br>0.82% அதிகம் |
| 24 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 25 மேற்கு மலம்பாட்டை ரோட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.01% குறைவு<br>0.85% அதிகம் |
| 25 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 26 மேற்கு மலம்பாட்டை ரோட்டில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.N.ரவிசந்திரன்,<br>திரு.A.பரமேஸ்வரி | 0.01% குறைவு<br>0.85% அதிகம் |
| 26 | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.22, வேதக் கோவில் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 7.00/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.97% அதிகம் |
| 27 | இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.26 காமாட்சியம்மன் கோவில் தெற்கு தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 8.25/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.99% அதிகம் |
| 28 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 29, பேட்டை மலம்பாட்டை ரோடு தேசிய நெடுஞ்சாலை–208 முதல் ஆடறுப்பு மனை வரை (முதல் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.99% அதிகம் |
| 29 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு ஆடறுப்பு மனை முதல் பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி வரை (இரண்டாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.99% அதிகம் |
| 30 | .இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு பேட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி முதல் நகராட்சி மேல்நிலை | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.99% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நீர்த்தேக்கத்தொட்டி வரை (மூன்றாம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | | | | |
| 31 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 31, பேட்டை மலம்பாட்டை ரோடு நகராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி முதல் பெரிய பாலம் வரை (நான்காம் பகுதி) தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.98/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.99% அதிகம் |
| 32 | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 28மற்றும் 30, பள்ளிக்கூடம் தென்வடல் தெருவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.00/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.98% அதிகம் |
| 33 | இந்நகராட்சி வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 1ம் மேற்கு பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 8.50/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.76% அதிகம் |
| 34 | இந்நகராட்சி வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 1ம் கிழக்குப் பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு. | இந்நகர்மன்ற தீர்மான எண்.33 நாள்.29.01.2018 | 9.75/– | திரு.P.மாடசாமி<br>திரு.N.ரவிசந்திரன், | மதிப்பீட்டு சதவீதம்<br>0.94% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு சதவீதத்திலும் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்திலும் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்.354/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 92</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 15</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் கண்ட **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018ன் கீழ் பரிந்துரை செய்த பணிகளை** மேற்கொள்வதற்கு இந்நகராட்சி தனிஅலுவலர் 02.03.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் 21.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017–2018** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – 18வது வார்டு நடு அய்யாபுரம் தெரு பள்ளிவாசல் முன்பு போர் அமைத்து ஏற்கனவே உள்ள மின்மோட்டாருடன் அமைத்தல் பணிக்கு. | இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி நாள்.02.03.2018 | 1.00/– | திரு.M.ராஜேந்திரபிரசாத்<br>திரு. M.மாலையப்பன், | 0.02% குறைவு<br>5.03% அதிகம் |
| 2. | கடையநல்லூர் நகராட்சி – 12வது வார்டு கல்வத் நாயகம் தெரு கீழ வட்டாரத்தில் போர் அமைத்து ஏற்கனவே உள்ள மின் மோட்டாருடன் அமைத்தல் பணிக்கு. | இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி நாள்.02.03.2018 | 1.00/– | திரு. M.மாலையப்பன்,<br>திரு.M.ராஜேந்திரபிரசாத் | 0.18% குறைவு<br>9.93% அதிகம் |
| 3. | கடையநல்லூர் நகராட்சி –அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பேவர்பிளாக்அமைத்தல் பணிக்கு. | இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி நாள்.02.03.2018 | 3.00/– | திரு. M.மாலையப்பன்,<br>திரு.M.ராஜேந்திரபிரசாத் | 0.15% குறைவு<br>0.27% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

**(ந.க.எண்.3327/2017/இ1)**

<u>தீர்மானம் எண். 93</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 16</u>**

தமிழ்நாடு அரசிதழ் எண்.33 நாள்.25.01.2018 நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக சுற்றறிக்கை எண்.7234/14/ஆர்1, நாள்.15.03.2018, நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் நாள். 28.03.2018ன்படி கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி கட்டிடங்கள், அவை சார்ந்த விடுதிகள் மற்றும் நூலகங்கள் தவிர ஏனைய தனியார் கல்வி கட்டிடங்களை முறையாக அளவீடு செய்து வரிவிதிப்பு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசு மற்றும் அரசு சாரா கல்வி கட்டிடங்களை அளவீடு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்ய அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அ) அரசு மற்றும் அரசு சாரா கல்வி கட்டிடங்களை அளவீடு செய்து சொத்துவரி நிர்ணயம் செய்வது தொடர்பான விளம்பரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருநெல்வேலி அவர்கள் மூலம் நாளிதழில் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1450/2018/அ1)**

<u>தீர்மானம் எண். 94</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 17</u>**

குடும்ப ஓய்வூதியம் வழங்கக் கேட்டு இந்நகராட்சிக்கு எதிராக திரு.ராமர் மற்றும் திருமதி.வள்ளி ஆகியோரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் (WP(MD)No. 10200/2017 மற்றும் 10201/2017) வழக்குகள் தொடரப்பட்ட நிலையில் இந்நகராட்சி சார்பாக நீதி மன்றத்தில் எதிர்வாதுறை தாக்கல் செய்த

வகைக்கு வழக்கு கட்டணமாக ரூ.20000/–ஐ திரு.பி.ஸ்ரீனிவாஸ், வழக்கறிஞர் அவர்களுக்க வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண் . 3170 /2017/சி1)**

**<u>தீர்மானம் எண். 95</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 18</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் 26/03/2018ம் தேதிய ஆய்வுக்கூட்ட நேரடி அறிவுரையில் இந்நகராட்சிப் பகுதியில் எதிர்வரும் கோடைகாலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் பிரச்சனையை சமாளிக்க வறட்சி நிவாரணதிட்டம் 2018–2019ன் கீழ் கூடுதலாக திறந்தவெளி கிணறுகள் அமைத்து தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதியில் கீழ்காணும் இடங்களில் வறட்சி நிவாரண திட்ட்டம் 2018–2019ன் கீர் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி வறட்சி நிவாரண திட்டம் 2018–2019ன் கீழ் இரண்டாற்று முக்கு பகுதியில் புதிய திறந்த வெளிக் கிணறு மின் மோட்டார் பம்பு அறை மற்றும் குழாய் பதித்தல் பணிக்கு | ரூ.30.00/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி வறட்சி நிவாரண திட்டம் 2018–2019ன் கீழ் பெரியாற்றுப்படுகையில் புதிய திறந்த வெளி கிணறு மின் மோட்டார் மற்றும் குழாய் பதித்தல் பணிக்கு | ரூ.25.00/– |

மேற்காணும் பணிக்களுக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க் கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1219 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 96</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 19</u>**

இந்நகராட்சி செயல்படுத்தப்படும் Swatchh Bharatch Mission (**SBM**) 2015–2016 திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் 10 பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.38984/2014/P1, நாள்.05.11.2015ன்படி ரூ.160.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் 10 பணிகளில் 8 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு பணிகளான இந்நகராட்சி புதிய உரக்கிடங்கிற்கு ரூ.37.00 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான இயந்திரங்கள் விநியோகம் செய்து நிறுவுதல் பணி மற்றும் மேற்காணும் இயந்திரங்களுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூரை அமைக்கும் பணியினை நிர்வாக காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் 07.03.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் **SBM** திட்டம் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின் படியும் மற்றும் 22.03.2018 அன்று நகராட்சி நிர்வாக கண்காணிப்பு பொறியாளரின் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்ட அறிவுரையில் இந்நகராட்சி புதிய உரக்கிடங்கிற்கு தேவையான இயந்திரகள் விநியோகம் செய்து நிறுவுதல் பணி மற்றும் மேற்காணும் பணிகளுக்கு மேற்கூரை அமைக்கும் பணி ஆகிய இரண்டு பணிகளுக்கு மாற்றாக அதே மதிப்பீட்டுத்தொகை ரூ.47.00 இலட்சத்தில் Mircro
